முழுப் பதிப்புரிமையுடையது.

# இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்

## மட்டம் I பரீட்சை – 2025 யூலை

## (103) பொருளியல்

(Economics)

2025-08-02
பிற்பகல்
[2.00 – 5.00]

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்):

பக்கங்கள் : 06
வினாக்கள் : 06

(1) ***காலம் :*** *03 மணித்தியாலம்*

(2) ***எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***

(3) *உங்களுக்குத் தரப்பட்டுள்ள* ***விடைப்புத்தகத்தில்*** *நீங்கள் விண்ணப்பித்த அதே* ***ஒரு மொழியிலேயே விடையளித்தல்*** *வேண்டும்.*

(4) *சகல செய்முறைகளையும் கணிப்புகளையும் சமர்ப்பிக்கவும். நீங்கள் மேற்கொண்ட எடுகோள்கள் ஏதாவது இருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடவும்.*

(5) *நிரற்படுத்தப்படாத கணிப்பான்களின் பாவனை* ***மாத்திரம்*** *அனுமதிக்கப்பட்டுள்ளது.*

(6) *வரைவிலக்கணங்களுடன்கூடிய* ***செயல் வினைச்சொல் செவ்வை நிரல்*** *இணைக்கப்பட்டுள்ளது. OTQs தவிர்ந்த ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒரு* ***வினைச்சொல்லைக்*** *கொண்டிருக்கிறது. பரீட்சார்த்திகள் செயல் வினைச்சொல் செவ்வை நிரலில் தரப்பட்ட வினைச்சொல்* ***வரைவிலக்கணத்தின்*** *அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*

(7) *100 புள்ளிகள்.*

---

## பகுதி A

### நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

(மொத்தம் 40 புள்ளிகள்)

### வினா 01

*இல. **1.1** தொடக்கம் **1.10** வரையிலான வினாக்களுக்கு மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க. தெரிவு செய்த விடையின் இலக்கத்தினை உமது விடைப்புத்தகத்தில் வினாவுக்குரிய இலக்கத்துடன் எழுதுக..*

**1.1** கீழ்வருவனவற்றில் காணிக்கான வெகுமதி எது?

(1) இலாபம் (2) வட்டி (3) வாடகை (4) கூலி

**1.2** கீழ்வருவனவற்றிலிருந்து சரியான கூற்றைத் தெரிவு செய்க :

(1) தேவைகள் வரையறையற்றதும் விருப்பங்கள் வரையறுக்கப்பட்டதும் ஆகும்.

(2) அரிதானதன்மையானது தெரிவுகளை உருவாக்குகிறது.

(3) பொருளாதார வளங்களுக்கான வழங்கலில் அரிதானதன்மை என்பது கிடையாது.

(4) வளங்கள் மாற்றுப் பயன்பாடுகளைக் கொண்டிருக்கும்போது, சந்தர்ப்பச் செலவு பூச்சியமாகும்.

**1.3** பொருள்கள் **A** மற்றும் **B** இற்கிடையிலான குறுக்குக் கேள்வி நெகிழ்ச்சியின் குணகம் நேர்க் கணியமாக இருப்பின், அத்தகைய பொருள்கள் :

(1) நிரப்புப் பொருள்கள் (2) சாதாரண பொருள்கள்

(3) தரம் குறைந்த பொருள்கள் (4) பிரதியீட்டுப் பொருள்கள்

**1.4** கீழ்வருவனவற்றில் அரசாங்கம் சந்தைப் பொருளாதாரத்தில் தலையீடு செய்வதற்கான பிரதான காரணமாக அமைவது எது?

(1) இலாபத்தன்மையை உச்சப்படுத்துவதற்கு.

(2) நுகர்வோரை / உற்பத்தியாளரைப் பாதுகாப்பதற்கு.

(3) தனியார் துறையிலுள்ள வேலைவாய்ப்பைப் பாதுகாப்பதற்கு

(4) மேற்கூறிய யாவும்.

**1.5** 2024 ஆம் ஆண்டிற்கான இலங்கை மத்திய வங்கியின் வருடாந்த பொருளாதார மீளாய்வுக்கு இணங்க, 2024 ஆம் ஆண்டிற்கான இலங்கையின் பொருளாதார வளர்ச்சி வீதம் :

(1) -7.3%. (2) -2.3%. (3) 5%. (4) 1.5%.

**1.6** கீழ்வருவனவற்றில் சந்தைப் பொருளாதார முறைமையின் பண்புகள் தொடர்பில் சரியான கூற்று **அல்லாதது** எது?

(1) தனியார் தொழில்முனைவோர் முறைமை காணப்படுதல்.

(2) நுகர்வோர் இறையாண்மை காணப்படுதல்.

(3) நியாயமான வருமானப் பரம்பல் காணப்படுதல்.

(4) தெரிவு செய்யும் சுதந்திரம் காணப்படுதல்.

**1.7** கீழ்வருவனவற்றில் தனியுரிமைப் போட்டிச் சந்தை தொடர்பில் சரியான கூற்று எது?

(1) தொழில்துறையில் அதிகளவான நிறுவனங்கள் காணப்படுதல்.

(2) சந்தைக்கான தடையற்ற நுழைவு காணப்படுதல்.

(3) இது நீண்ட கால ஓட்டத்தில் சாதாரண இலாபத்தை/ பூச்சிய பொருளாதார இலாபத்தை உருவாக்குதல்.

(4) மேற்கூறிய யாவும்.

**1.8** சராசரி மொத்தக் கிரய (ATC) வளையியின் இழிவுப் புள்ளியில், எல்லைக் கிரயம் (MC) ஆனது ;

(1) சராசரி மொத்தக் கிரயத்திற்குச் சமனாகும். (2) சராசரி நிலையான கிரயத்திற்குச் சமனாகும்.

(3) சராசரி மாறும் கிரயத்திற்குச் சமனாகும். (4) சராசரி மொத்தக் கிரயத்தை விட அதிகமாகும்.

**1.9** கீழ்வருவனவற்றில் நிரம்பல் கணியத்தின் விரிவாக்கம் தொடர்பில் சரியானது எது?

(1) நிரம்பல் வளையி வழியேயான கீழ்நோக்கிய நகர்வு.

(2) நிரம்பல் வளையி வழியேயான மேல்நோக்கிய நகர்வு.

(3) நிரம்பல் வளையியின் இடப் பக்கமான நகர்வு.

(4) நிரம்பல் வளையியின் வலப் பக்கமான நகர்வு.

**1.10** கீழ்வருவனவற்றில் குறுங்கால உற்பத்திச் செயன்முறை தொடர்பில் சரியான கூற்று **அல்லாதது** எது?

(1) உள்ளீடுகளின் மாறும் காரணிகள் காணப்படுகின்றன.

(2) உற்பத்திக் காரணிகள் மாறும் காரணிகள் எனவும் நிலையான காரணிகள் எனவும் பிரிக்கப்படுகின்றன.

(3) உள்ளீடுகளின் நிலையான காரணிகள் எதுவும் இல்லை.

(4) நிறுவனங்கள் உற்பத்தியை விரிவுபடுத்துவதில் அதிக நெகிழ்வுத்தன்மையைக் கொண்டிருக்க வில்லை.

*இல.* **1.11** *மற்றும்* **1.12** *ஆகிய வினாக்களிலுள்ள இடைவெளிகளை நிரப்புவதற்குச் சரியான சொல் / சொற்களை அடைப்புக்குள்ளிருந்து தெரிவுசெய்க. தெரிவு செய்யப்பட்ட சொல் / சொற்களை அதற்குரிய வினா இலக்கத்துடன் உமது விடைப்புத்தகத்தில் எழுதுக.*

**1.11** ............... *(அளத்தகு / ஒப்புமையான)* பயன்பாட்டுக் கோட்பாட்டிற்கு அமைய, திருப்தி என்பது அளவிட முடியாதது ஆகும்.

**1.12** ................. *(மாறாத / மாறுகின்ற)* தொழினுட்பம் என்பது உற்பத்திச் சாத்திய வளையியின் (PPC) ஓர் அனுமானமாகும்.

*கீழே* **1.13** *மற்றும்* **1.14** *இல் தரப்பட்டுள்ள ஒவ்வொரு கூற்றும்* ***சரியானதா*** *அல்லது* **தவறானதா** *எனக் குறிப்பிடுக. உமது விடையை (சரியானது / தவறானது) உரிய வினா இலக்கத்துடன் விடைப் புத்தகத்தில் எழுதுக*

**1.13** எல்லைக் கிரயம் என்பது தரப்பட்ட காலப்பகுதியில் உள்ள வெளியீட்டின் அலகொன்றிற்கான கிரயத்தைக் குறிக்கிறது.

**1.14** நிறைபோட்டி நிறுவனமொன்று நீண்ட கால ஓட்டத்தில் சாதாரண/ பூச்சிய பொருளாதார இலாபங்களை உழைக்கிறது.

**1.15** *தொடக்கம்* **1.20** *வரையுள்ள வினாக்களுக்கான விடைகளை உங்களது விடைப்புத்தகத்திலே உரிய வினா இலக்கத்தைக் குறிப்பிட்டு அதன் எதிரே எழுதுக.*

**1.15** "பேரினப் பொருளியல்" இற்கும் "நுண்பாகப் பொருளியல்" இற்குமிடையிலான வேறுபாட்டைக் குறிப்பிடுக.

**1.16** பணவீக்கத்திற்கான இரண்டு (02) பிரதான காரணங்களைக் (main causes) குறிப்பிடுக.

**1.17** நிரம்பல் விதி (Law of Supply) என்பதாற் கருதப்படுவது யாதெனச் சுருக்கமாக விவரிக்க.

**1.18** நிரம்பல் வளையி இடப் பக்கமாக நகர்வதற்கான இரண்டு (02) காரணங்களைப் பட்டியலிடுக.

**1.19** நீடித்திருக்கத்தக்க அபிவிருத்தியின் பொருளாதார விவரத்தில் (economic profile) உள்ளடக்கப் பட்டுள்ள இரண்டு (02) உருப்படிகளைப் பட்டியலிடுக.

**1.20** நாணயக் கொள்கையின் கணியம்சார் கருவியொன்றாக, திறந்த சந்தைச் செயற்பாடுகளைச் (open market operations) சுருக்கமாக விவரிக்குக.

(02 புள்ளிகள் வீதம், மொத்தம் 40 புள்ளிகள்)

*பகுதி A நிறைவு*

## பகுதி B

(மொத்தம் 40 புள்ளிகள்)

### வினா 02

(a) பொருளாதாரமற்ற பொருள்களின் மூன்று (03) பண்புகளைக் **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(b) திட்டமிடப்பட்ட பொருளாதார முறைமை ஒன்றின் மூன்று (03) பண்புகளைக் **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(c) தனியுரிமைச் சந்தை ஒன்றின் இரண்டு (02) பண்புகளை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

### வினா 03

(a) பண்டமொன்று தொடர்பில் தரப்பட்டுள்ள கீழ்வரும் கேள்விச் (Qd) சார்பையும் நிரம்பல் (Qs) சார்பையும் கவனத்திற் கொள்க :

$$Q_d = 2,800 - 25p$$

$$Q_s = -200 + 100p$$

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(i) பண்டத்திற்கான சந்தைச் சமநிலை விலையையும் கணியத்தையும் **கணிக்குக.** (04 புள்ளிகள்)

(ii) உற்பத்தியாளர் மிகையைக் **கணிக்குக.** (02 புள்ளிகள்)

(b) அரசாங்கமானது பண்டமொன்றிற்கு சமநிலை விலையை விட அதிகமான பெறுமதியை ஆகக் குறைந்த விலையாக விதிப்பதால் ஏற்படும் விளைவுகளை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

### வினா 04

(a) அண்மைப் பணம் (near money) என்பதாற் கருதப்படுவது யாதென உதாரணமொன்றுடன் **விபரிக்குக.** (02 புள்ளிகள்)

(b) பணத்திற்கான தேவைக்கான இரண்டு (02) நோக்கங்களை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(c) உங்களுக்குக் கீழ்வரும் தரவுகள் தரப்பட்டுள்ளன :

| | ரூபா மில்லியன் |
|---|---|
| பொதுமக்களால் வைத்திருக்கப்படும் நாணயம் | 15,600 |
| வர்த்தக வங்கிகளில் பொதுமக்களால் வைத்திருக்கப்படும் கேள்வி வைப்புகள் | 27,600 |
| வர்த்தக வங்கிகளில் பொதுமக்களால் வைத்திருக்கப்படும் கால மற்றும் சேமிப்பு வைப்புகள் | 14,800 |
| வதிவுள்ளோர் வெளிநாட்டு நாணய வங்கியியல் அலகுகளில் உள்ள கால மற்றும் சேமிப்பு வைப்புகள் | 8,600 |

மேற்படி தகவல்களை அடிப்படையாகக் கொண்டு,

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

கீழ்வருவனவற்றைக் **கணிப்பிடுக** :

(i) குறுகிய பண நிரம்பல் ($M_1$). (02 புள்ளிகள்)

(ii) விரிந்த பண நிரம்பல் ($M_2$). (02 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 05

(a) முழு நயக் கோட்பாடு என்பதாற் கருதப்படுவது யாதென உதாரணமொன்றுடன் **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(b) சர்வதேச வர்த்தகத்திலுள்ள மூன்று (03) பிரதிகூலங்களைப் **பட்டியலிடுக.** (03 புள்ளிகள்)

(c) அமெரிக்க டொலருக்கு எதிராக இலங்கை ரூபாயின் பெறுமதியை மதிப்பிறக்கம் செய்வதால் ஏற்படக்கூடிய இரண்டு (02) விளைவுகளை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 மொத்தம்)

*பகுதி B நிறைவு*

# பகுதி C

(மொத்தம் 20 புள்ளிகள்)

## வினா 06

(A) உற்பத்தியாளரின் விலை மற்றும் கொள்வனவாளரின் விலை ஆகியவற்றிற்கிடையேயான வேறுபாட்டை **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(B) பொருளாதாரமொன்றின் ஒரு வருட காலப்பகுதிக்கான தேசிய கணக்குகளுடன் தொடர்புடைய கீழ்வரும் அனுமானத் தரவுகள் உங்களுக்குத் தரப்பட்டுள்ளன :

| | ரூபா மில்லியன் |
|---|---|
| தனியார் நுகர்வுச் செலவினம் | 5,000 |
| அரசாங்க நுகர்வுச் செலவினம் | 7,000 |
| மொத்த உள்நாட்டு நிலையான மூலதனவாக்கம் | 2,500 |
| இருப்புகளிலுள்ள மாற்றங்கள் | 300 |
| பெறுமதிகளிலுள்ள மாற்றங்கள் | 245 |
| பொருள்கள் மற்றும் சேவைகளின் ஏற்றுமதிகள் | 4,500 |
| பொருள்கள் மற்றும் சேவைகளின் இறக்குமதிகள் | 13,000 |
| வெளிநாட்டு நிகர முதன்மை வருமானம் | 500 |

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

கீழ்வருவனவற்றைக் **கணிப்பிடுக** :

(a) மொத்த உள்நாட்டுச் செலவினம் (GDE) – சந்தை விலையில். (06 புள்ளிகள்)

(b) மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) – சந்தை விலையில். (03 புள்ளிகள்)

(c) மொத்தத் தேசிய வருமானம் (GNI) – சந்தை விலையில். (02 புள்ளிகள்)

(C) தேசிய கணக்குகளைத் தயாரிப்பதன் மூன்று (03) முக்கியத்துவங்களைக் **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(D) அரசாங்கத்தின் தோல்விக்கான இரண்டு (02) காரணங்களை **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

*பகுதி C நிறைவு*

# செயல் வினைச்சொல் செவ்வை நிரல்

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| அறிவு (1) | விடயங்களையும் அடிப்படை எண்ணக் கருக்களையும் ஞாபகப்படுத்தல் | வரைக (Draw) | வரைபடம் அல்லது வரிப்படமொன்றைச் சமர்ப்பித்தல் |
| | | தொடர்புபடுத்துக (Relate) | தர்க்கரீதியாக அல்லது காரணரீதியாக தொடர்புகளைத் தாபித்தல் |
| | | கூறுக/ குறிப்பிடுக(State) | திட்டவட்டமாக அல்லது தெளிவாக விபரங்களை வெளிப்படுத்தல் |
| | | அடையாளங்காண்க / இனங்காண்க (Identify) | கருத்திற்கொண்ட பின்னர் ஏற்பிசைவு செய்தல், தாபித்தல் அல்லது தெரிவுசெய்தல் |
| | | நிரற்படுத்துக /பட்டியலிடுக (List) | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| முற்றடக்கம் (2) | யோசனைகள் மற்றும் தகவல்களை விபரித்தலும் தெளிவுபடுத்தலும் | ஏற்பிசைவு செய்க (Recognize) | அறிவு அல்லது சூழ்நிலை அனுபவத்தைப் பயன்படுத்தி செல்லுபடித்தன்மையை அல்லது அதன் இயலாமையைக் காட்டுதல் |
| | | பொருள் விளக்குக / கருத்துக்கூறுக(Interpret) | விளங்கக்கூடிய அல்லது பரிச்சயமான பதங்களில் தெளிவுபடுத்தல் |
| | | விளக்குக (Describe) | பிரதான அம்சங்களை எழுதுதலும் தொடர்பாடுதலும் |
| | | விபரிக்குக (Explain) | உரிய விடயங்களைப் பயன்படுத்தி தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | | பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணப்படுத்துக(Define) | சரியான தன்மை, நோக்கு அல்லது பொருளைத் தருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| பிரயோகம் (3) | புதிய சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தலும் பின்பற்றலும் | கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க(Reconcile) | வேறொன்றுடன் ஒத்திருப்பதை / பொருந்தியிருப்பதை ஒப்புவித்தல் |
| | | வரைக (Graph) | வரைபுகள் மூலம் குறித்துக்காட்டுதல் |
| | | மதிப்பிடுக (Assess) | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | | தீர்க்குக (Solve) | கணிப்பீடுகள் அல்லது விளக்கங்கள் ஊடாக தீர்வைக் கண்டுபிடித்தல் |
| | | தயாரிக்குக (Prepare) | குறித்த நோக்கத்திற்காக உரிய முறையில் தயார்படுத்தல் |
| | | எடுத்துக்காட்டுடன் விவரிக்குக (Demonstrate) | உதாரணங்களுடன் நிறுவுதல் அல்லது வெளிக்காட்டல் |
| | | கணிக்குக / கணிப்பிடுக (Calculate) | கணிதரீதியான கணிப்பீட்டுடன் கண்டறிதல் அல்லது கணித்தல் |
| | | பிரயோகிக்குக (Apply) | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| பகுப்பாய்வு (4) | யோசனைகளுக் கிடையிலான தொடர்புகளை எழுதுதலும் பிரசினங்களைத் தீர்த்தலும் | தொடர்பாடுக(Communicate) | தகவல்களைப் பகிர்தல் அல்லது பரிமாறுதல் |
| | | சுருக்கமாகக குறிப்பிடுக(Outline) | முக்கிய அம்சங்களின் தொகுப்பினைத் தருதல் |
| | | வேறுபடுத்துக (Contrast) | வேறுபாடுகளைக் காட்டுவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | ஒப்பிடுக (Compare) | ஒற்றுமைகளை அறிவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | கலந்தாய்வு செய்க / ஆராய்க (Discuss) | விவாதிப்புகள் மூலம் விபரமாக ஆய்வுசெய்தல் |
| | | வித்தியாசப்படுத்துக / வகையிடுக (Differentiate) | சிலவற்றை வேறுபடுத்துகின்ற வித்தியாசங்களைக் காட்டுதல் |
| | | பகுப்பாய்வு செய்க (Analyze) | தீர்வினை அல்லது பேறினை கண்டுபிடிப்பதற்காக விபரமாக ஆய்வுசெய்தல் |